**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.238/2025</u>**

**<u>நாள் : 02.03.2026</u>**

**ம.சா.** 2 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஈஷ்வரன் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு. முனிரத்தினம் | வயது | : | 36 |
| ஊர் | : | பெரியகரம் | தொழில் | : | ட்ரம்ஸ் செட் |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**<u>1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். மனுதாரர் அழைத்ததன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் அன்புமணிக்கு சொந்தமான ஆட்டோவில் நானும், கார்த்திக், அரவிந்தன், வேலு, முருகன், வினோத்குமார், அஜித் ஆகியோர் பயணித்தோம். ஆட்டோ டிரைவரோடு 10 பயணித்தோம் என்றால் சரியல்ல. 9 பேர் பயணித்தோம். விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் காயம் ஏற்பட்டது. இதுசம்பந்தமாக இதே

நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். விபத்து சமயத்தில் ஆட்டோ டிரைவர் குடிபோதையில் இருந்த நிலையில் ஆட்டோவின் மேல்பகுதியில் ட்ரம்ஸ் செட் கட்டிக்கொண்டு கவனக்குறைவாக ஓட்டிச் சென்று அரசு பேருந்தின்மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. அரசு பேருந்து ஓட்டுநர் விபத்திற்கு எந்தவிதத்திலும் காரணம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>3ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து சம்பந்தமாக நான் தாக்கல் செய்திருந்த வழக்கில் 3ஆம் எதிர்மனுதாரரை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். 2ஆம் எதிர்மனுதாரர் ஆட்டோ ஓட்டுநரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படாததால்தான் 2ஆம் எதிர்மனுதாரரை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு 1ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.